Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy one years.

Vol. 71 என் இருதயத்தின் வியாகுலங்கள் பெருகியிருக்கிறது; ... என்னை நீங்கலாக்கிவிடும் சங்.25:17 ஜனவரி 2025 No.1

எழுப்புதலைக் கொண்டு வரும் ஜெபம்

The prayer that brings revival

Ernest M.wadsworth

"அவர்கள் ஜெபம் பண்ணின போது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது; அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும், ஒரே மனமுமுள்ள வர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவா யிருந்தது. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ் தலர்கள் மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்தார்கள்; அவர்கள் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டா யிருந்தது" அப்.4:31-33.

எழுப்புதலுக்கான ஜெபம் மற்ற எல்லா ஜெபங்களையும் விட வேறு பட்டது. வேதவசனங்களில் இத்தகைய ஊக்கமான ஜெபங்களுக்கு அதிகமான எடுத்துக்காட்டுகள் உண்டு. இவற்றில் மற்ற ஜெபங்களில் இல்லாத காரணிகள் காணப்படுகின்றன. அவற்றிற்கு தேவனை அசைக்கக்கூடிய வலிமை இருக்கிறது. அவற்றில் பெந்தெகொஸ்தேயின் இரகசியம் அடங்கியுள்ளது. தேவன் அதிக மாக நேசிக்கும் காரியங்கள் அடங்கி யுள்ளன. மிகுந்த ஆர்வம் இதில் முக்கிய மானது. தேவனோடுள்ள ஐக்கியம் மிகவும் நெருக்கமாயிருக்கிறது. அவை அதிகமாக மன்றாடுபவைகளாயிருக் கின்றன. ஆவியின் பேராவலை அவை வார்த்தைகளாக வெளிப்படுத்து கின்றன. அவை பரலோகத்தை அசைத்து ஆசீர்வாத மழைகளைக் கொண்டு வருவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எலியா இவ்வகையான ஜெபத் தால் எழுப்புதலின் ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தான். "கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப் பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும் படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான், அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி....."1 இராஜா.18:37,38.

எஸ்றாவின் எழுப்புதல் ஜெபம் தேசத்தை சுத்திகரிக்க ஏதுவாயிருந்தது. ஆசாரியர்களும் ஜனங்களும் தேசத்தின் வாலிபப்பிள்ளைகளை தங்களுக்கும் தங்கள் மகன்களுக்கும் கொண்டார்கள். பரிசுத்தமான விதை தீட்டுப்பட்டது. பிரபுக்கள் மற்றும் அதிகாரிகள் இதில் முக்கிய குற்றவாளிகளாயிருந்தனர். எனவே எஸ்றா இவ்வாறு ஜெபித்தான்:

"என் தேவனே, நான் என் முகத்தை என் தேவனாகிய உமக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கலங்குகிறேன்; எங்கள் அக்கிர மங்கள் எங்கள் தலைக்கு மேலாகப் பெரு கிற்று; எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்து போயிற்று"(எஸ்றா 9:6).

"எஸ்றா இப்படி விண்ணப்பம் பண்ணி அறிக்கையிட்டு, அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்து கிடக்கையில், இஸ்ரவேல் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவனிடத்தில் வந்து கூடிற்று; ஜனங்கள் மிகவும் அழு தார்கள்..." மேலும் அவர்கள், "நாங்கள் அந்நிய ஸ்திரீகளை சேர்த்துக் கொண்ட தினால் எங்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ் செய்தோம். ஆகிலும் இப்பொழுது இந்தக் காரியத்திலே இன்னும் இஸ்ரவேலுக்காக நம்பிக்கை உண்டு... நம்முடைய தேவனோடே கூட உடன்படிக்கை பண்ணுவோம்" என்றார்கள்.(எஸ்றா 10:1-3) இவ்வாறு தேசம் பாதுகாக்கப்பட்டது.

அப்போஸ்தலர்கள் ஜெபத்தில் இணைந்து பெந்தெகொஸ்திற்குப் பின்பும் இன்னொரு பெந்தெகொஸ்தே எழுப்புதலைப் பெற்றனர். "அவர்கள் அதைக்கேட்டு, ஒருமனப்பட்டு தேவனை நோக்கி சத்தமிட்டு: கர்த்தாவே நீர் வானத்தையும் பூமியையும் சமுத்தி ரத்தையும் அவைகளிலுள்ள யாவற் றையும் உண்டாக்கின தேவனாயிருக் கிறீர்... இப்பொழுதும் கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களை தேவரீர் கவனித்து, உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தி னாலே, அடையாளங்களும், அற்புதங் களும் நடக்கும்படி செய்து, பிணியாளி களைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி ... அவர்கள் ஜெபம் பண்ணின போது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தை தைரியமாய்ப் பிரசங் கித்தார்கள்"அப்.4:24,29-31.

ஊக்கமான எழுப்புதலின் ஜெபங்களின் குணாதிசயங்கள்

1. எழுப்புதலின் ஜெபங்கள் பெருமூச்சு விடும் ஜெபங்கள்:

சிறையிருப்பின் வீட்டில் இஸ்ர வேலரின் ஜெபங்கள் இப்படியிருந்தது. "தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு..." (யாத்.2:24) இந்த பெருமூச் சின் ஜெபம் தான் இன்றைய தேவை. சாமுவேல் தீர்க்கன் இஸ்ரவேலிடம் பேசிய கடைசி செய்தியில்: "யாக்கோபு எகிப்திலே போயிருக்கும் போது, உங்கள் பிதாக்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்; அப்பொழுது கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் அனுப்பினார். அவர்கள் உங்கள் பிதாக் களை எகிப்திலிருந்து அழைத்து வந்து, அவர்களை இந்த ஸ்தலத்திலே குடி யிருக்கப் பண்ணினார்" 1 சாமு.12:8.

கலங்கியிருக்கும் தேவபிள்ளை கள் பெருமூச்சுவிடும் போது தேவன் எழும்பி உதவி செய்கிறார். "...சீயோ னோவெனில் ஒருமிக்க வேதனைப் பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது" (ஏசாயா 66:8). ஆவியான வர் தேவனுடைய பிள்ளைகளோடு சேர்ந்து "வாக்குக்கடங்காத பெருமூச்சுக ளோடு நமக்காக வேண்டுதல் செய் கிறார்" ரோமர் 8:26.

2. எழுப்புதல் ஜெபங்கள் வெட்கத்தோடு ஏறெடுக்கப்படுபவை:

எஸ்றா இவ்வாறு ஜெபித்தார்: "என் தேவனே, நான் என் முகத்தை என் தேவனாகிய உமக்கு முன்பாக ஏறெ டுக்க வெட்கிக் கலங்குகிறேன். எங்கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்கு மேலாகப் பெருகிற்று. எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்து போயிற்று" (எஸ்றா.9:6) இரத்தாம்பர சிவப்பான பாவங்களை அவர் வெட்க முகத்தோடு ஏறெடுத்தார். நமது பாவங்களை வெட் கத்தோடு அறிக்கையிட வேண்டும். மனஸ்தாபம் கொள்ளும் இருதயம், தேவனை மகிமைப்படுத்தும் வண்ண மாக நமது வெட்கமான நிலையை வெட்க முகத்தோடு அறிக்கையிட வேண்டும். தேவன் இத்தகைய ஜெபங் களைப் புறக்கணிப்பதில்லை.

3. எழுப்புதலின் ஜெபங்கள் சாஷ்டாங்க மாய் விழுந்து பண்ணும் ஜெபங்கள்:

அக்கிரமத்தைப் பார்த்து, இய லாய்மையையும், திறமையின்மையை யும் அதனால் தேவன் மீது சார்ந்து வாழ் வதை ஒத்துக்கொண்டு, உலகத்தின்

(5-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? *சங். 85:6.*

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps. 85:6.

கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் உபாகமம் 31:8.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2025 ஜனவரி மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும் '*வெகுமனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்*' துதிக்கிறேன். புதிய ஆண்டுக்காக ஆண்டவரை அதிக நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன்!

1. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி.
2. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.
3. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,
4. உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடி சூட்டி,
5. நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது சங்கீதம் 103:1-5.

2025-ம் ஆண்டு **புதிய முகவரி பட்டியல்** கணினியில் பதிவு செய்கிறோம். வாசகர் யாருக்காவது பத்திரிகை வரத் தவறினால் உடனே எங்களுக்கு தொலைபேசி வழியாக தெரிவியுங்கள். மொபைல் : *95432 21008, 94897 40295*

வாசகர் கடிதம்

வருகையின் தூதன் என் இல்லத்திற்கு தவறாமல் வருவது பற்றி மகிழ்ச்சி அடைகிறோம். தங்களின் விடா முயற்சியால் இவ்வூழியத்தை நடத்தி வருகிறீர். எங்கள் குடும்பத்திற்காகவும் ஜெபிக்கவும். என்னுடைய சிறு காணிக்கை ரூ.500/- அனுப்புகிறேன். 50 வருட காலமாய் தொடர்ந்து என் வீட்டிற்கு வருகிறது. இறைவனுக்கு நன்றி. தங்கள் ஊழிய குடும்பத்திற்காகவும் நன்றி.

5-12-2024 சகோதரி **G.V.**, காஞ்சீபுரம்

2025 -ம் ஆண்டு உங்களுக்கு அதிக ஆசீர்வாதமாக இருக்க, ஆண்டவருடைய ஆலோசனைகள்

I *கர்த்தருடைய வார்த்தையை வாசியுங்கள், விசுவாசியுங்கள்*

பின்னும் ஆபிராம்: தேவரீர் எனக்குப் புத்திர சந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான் என்றான்.

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி: இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப் பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்று சொல்லி,

அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.

அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் *ஆதி.15:3-6.*

பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: உன் மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப் பாயாக; சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக்கும்.

நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன் என்றார் ஆதி.15:15,16.

II *கர்த்தருடைய வார்த்தையை விதையுங்கள்*

ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான்.

அவன் ஐசுவரியவானாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான் ஆதி.26:12,13.

சில விதை நல்ல நிலத்தில் விழுந்து, ஓங்கி வளருகிற பயிராகி, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறு மாகப் பலன் தந்தது மாற்கு 4:8.

விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான் மாற்கு 4:14.

அந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம் லூக்கா 8:11.

(3-ம் பக்கம் பார்க்க)

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்து மாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபை களின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக்கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவி யையும் பொழிந்தருளும், ஆமென். ரோ.8:26; எபி.5:7; சகரியா12:10.

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB**0213120

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA**0000063

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **618222001369O4**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB**0001110

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழ்நாட்டுக்குத் தேவை ஜெபமும், சுவிசேஷ ஊழியமும் தான்" என்று ஒரு தேவ ஊழியர் என்னிடம் கூறினார். இன்னொரு தேவ ஊழியர், கிதியோன் புதிய ஏற்பாடு புத்தகங்களை தன்னுடைய பையில் சுமந்து சென்றார். என்னைப் பார்த்து, "*வேத புத்தகங்களை தீவிரமாய் வினியோகிப்பதில் நான் ஒரு தீவிரவாதி*" என்று கூறினார்.

நீங்களும் வேத புத்தகங்கள், கைப்பிரதிகள், வசன காலண்டர்கள் போன்றவற்றை தீவிரமாய் வினியோகம் செய்யலாம். திருமணங்கள், பிறந்த நாட்கள் போன்றவற்றிற்கு விலை உயர்ந்த கில்ட் போட்ட அழகான வேத புத்தகங்களை வாங்கி பரிசளிக்கலாம்.

III *பிந்தி தனித்திருங்கள்*

இராத்திரியில் எழுந்திருந்து, தன் இரண்டு மனைவிகளையும், தன் இரண்டு பணிவிடைக்காரிகளையும், தன்னுடைய பதினொரு குமாரரையும் கூட்டிக் கொண்டு, யாப்போக்கு என்கிற ஆற்றின் துறையைக் கடந்தான்.

அவர்களையும் சேர்த்து, ஆற்றைக் கடக்கப்பண்ணி, தனக்கு உண்டான யாவையும் அக்கரைப்படுத்தினான்.

யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்

அவர்: நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான்.

அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்.

...அங்கே அவனை ஆசீர்வதித்தார் ஆதி.32:22-29.

IV *தேவனுக்கு பயப்படுங்கள்*

அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன்: இதோ, அடியேன் என்றான்.

அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்த படியினால் ***நீ தேவனுக்குப் பயப்படுகிறவன்*** என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார் ஆதி.22:11,12.

நான் உன்னை ***ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து***, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்றும்,

நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்த படியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ***ஆசீர்வதிக்கப்படும்*** என்றும் என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் ஆதி.22:17,18

அதற்குச் சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: யோபு விருதாவாகவா ***தேவனுக்குப் பயந்து*** நடக்கிறான்?

நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்க வில்லையா? அவன் கைகளின் கிரியையை ***ஆசீர்வதித்தீர்***; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று யோபு 1:9,10.

கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்; இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார், அவர் ஆரோன் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்.

கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார் சங்.115:12,13.

V *கடன் படாதிருங்கள்*

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், ***நீயோ கடன் வாங்குவதில்லை*** உபாகமம் 15:6.

ஏற்ற காலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச் செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார் நீ அநேக ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய் உபாகமம் 28:12.

தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ எலிசாவைப் பார்த்து: உமது அடியானாகிய என் புருஷன் இறந்து போனான்; உமது அடியான் கர்த்தருக்குப் பயந்து நடந்தான் என்பதை அறிவீர்; கடன் கொடுத்தவன் இப்பொழுது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக் கொள்ள வந்தான் என்றாள்.

எலிசா அவளை நோக்கி: நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றான். அதற்கு அவள்: ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள் 2 இராஜா.4:1,2.

அந்த சம்பவம் இவ்வாறு முடிகிறது:

அவள் போய் தேவனுடைய மனுஷனுக்கு அதை அறிவித்தாள், அப்பொழுது அவன்: நீ போய் அந்த எண்ணெயை விற்று, உன் கடனைத் தீர்த்து, மீந்ததைக்கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள் என்றான் 2 இராஜா.4:3 முதல் 7 வரை.

ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் ரோமர் 13:8.

VI *கர்த்தருக்கு கொடுங்கள்*

பழைய ஏற்பாடு:

சாதோக்கின் சந்ததியானாகிய அசரியா என்னும் பிரதான ஆசாரியன் அவனை நோக்கி: இந்தக் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவரத் தொடங்கினது முதல் நாங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தோம்; இன்னும் மிச்சமும் இருக்கிறது; ***கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்த திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது*** என்றான் 2 நாளா.31:10.

என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும் படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங் கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ வென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். மல்கியா 3:10.

புதியஏற்பாடு:

அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தந்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்

மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன் 2 கொரி.8:1-3.

VII *ஏழைகளுக்கு கொடுங்கள்*

அவனுக்குத் தாராளமாய்க் கொடுப்பாயாக; அவனுக்குக் கொடுக்கும் போது உன் இருதயம் விசனப்படாதிருப்பதாக; அதினிமித்தமாக உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லா காரியங்களிலும் உன்னை ***ஆசீர்வதிப்பார்***.

தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்க வேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் உபாகமம் 15:10,11.

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் நீதி.19:17.

He that hath pity upon the poor lendeth undo the LORD; and that which he hath given will be pay him again.

பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்.

அப்பொழுது விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்.

அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார்; நீ சத்த மிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார் ஏசாயா 58:7-9.

அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் *என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே*, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்.

வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார். மத். 25:34-36.

அந்த வேத பகுதி இவ்வாறு முடிகிறது:

அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார் மத்தேயு 25:40

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக
தேவ கிருபை உங்களோடிருப்பதாக

உங்களுக்கு எங்கள் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உங்கள் சகோதரன்,

W. சாமுவேல் ஃ பின்னி **வெஸ்லி தேவதாசன்**

தரிசன பாடல்

எழுப்புதல் அடையட்டும் இந்தியா
இயேசுவை உயர்த்தட்டும் இந்தியா
இமய முதல் குமரி வரை
இயேசுவுக்கே சொந்தம் இந்தியா

இந்தியா இந்தியா
இயேசுவுக்கே சொந்தம் இந்தியா

1. தேசத்தை மூடிடும் அந்தகார வல்லமை
அகன்று ஓடிட வேண்டும்
அரசு அதிகாரம் ஆளுகை எல்லாம்
ஆண்டவர் இயேசுவை உயர்த்தணும்

2. பட்டணம் கிராமங்கள் எல்லைகள் எல்லாம்
திருச்சபைகளாய் மாறணும்
தேசத்தில் வாழ்திடும் மக்கள் எல்லாம்
தேவனின் பிள்ளைகளாய் மாறணும்

3. அனலும் குளிரும் இல்லா சபைகள்
அக்கினி எழுப்புதல் அடையணும்
ஆண்டவர் இயேசுவின் நாமத்தினாலே
அற்புத அதிசயம் செய்யணும்

- இந்தியா

முக்கிய அறிவிப்பு

காணிக்கை அனுப்பும் போது உங்கள் முழு முகவரியையும், மொபைல் எண்ணையும், பெயருக்கு மேல் அச்சிடப்பட்டுள்ள உங்கள் பத்திரிகை பதிவு எண்ணையும் தயவாய் எழுதுங்கள்.

அன்பான வாசகர்களின் கவனத்திற்கு

2020 -ம் ஆண்டு நாம் தபால் சலுகையை இழந்தது முதல் சுமார் 5 வருடங்கள், ஆண்டு காணிக்கை ரூபாய்500 அனுப்புங்கள் என்று எழுதி வருகிறேன். **வாசகர்கள் இதை படிப்பதில்லை.**

2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப

1.வருகையின் தூதன் ஊழியத்தை *தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும். மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.*

2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.

3. உங்கள் பிறந்த நாள், திருமணநாள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் பிறந்த நாள் போன்ற மகிழ்ச்சியான தினங்களில், ஆண்டவருடைய ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பி ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெறுங்கள்.

2023-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப

1. எல்லா ஊழியங்களைப் போல **மாதந்தோறும்** வருகையின் தூதன் பத்திரிகை பணியை தாங்குங்கள்.

2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.

3. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி சிறப்பு காணிக்கைகள் அனுப்புங்கள்

வருடந்தோறும் நான் எழுதினாலும் இன்று வரை சில வாசகர் வருடந்தோறும் ரூபாய் 100, 150,200 என்று அனுப்புகிறார்கள்.

2025 ஜனவரி மாதம் புதிய முகவரி பட்டியல் கணினியில் பதிவு செய்கிறோம். **2025 -ம் ஆண்டு உங்களுக்கு பத்திரிகை அனுப்ப** ரூபாய் 500 அனுப்பும்படி அதிக அன்பாய் கேட்கிறேன்.

ஆசிரியர்

எழுப்புதலுக்காக விசுவாசத்தோடு ஜெபியுங்கள்

Pray in faith for Revival

W.C.Moore

யோசுவாவுக்கும் காலேபுக்கும் தேவனிடத்தில் விசுவாசம் இருந்தபடியால் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசித்தார்கள். "உங்கள் விசுவாசத்தின்படியே உங்களுக்கு ஆகக் கடவது" *(மத்.9:29)* இயேசுவின் வார்த்தை. பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசம் இஸ்ரவேலர் அனைவருக்கும் வாக்களிக்கப்பட்டது. ஆனால் அவிசுவாசத்தினால் அவர்களில் அனேகர் அதற்குள் பிரவேசிக்க முடியவில்லை.

யோசுவாவும் காலேபும் தேவனிடத்தில் அதிக பயபக்தியாயிருந்தபடியால் அவரை முழுவதுமாய் விசுவாசித்து நெருக்கமாய் அவரைப் பின் பற்றினார்கள். எனவே காலம் வந்த போது வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருந்தார்கள். தாம் வாக்குப்பண்ணியதை தேவன் நிச்சயமாகக் கொடுப்பார் என்று அவர்கள் நம்பினார்கள். அவர்களது மனதுகளும் இருதயங்களும் தேவனில் உறுதியாக இருந்ததே தவிர நிபந்தனைகளையோ, சூழ்நிலைகளையோ அல்லது மக்களையோ சார்ந்திருக்க வில்லை.

அந்த நூற்றிருபது பேரும் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக தேவனை உத்தம விசுவாசத்தோடு பின்பற்றியதோடு பரத்தின் வல்லமையால் நிரப்பப்படும் வரை காத்திருந்தனர். தேவ ஆவியானவர் நம்மில் அனேகர் எழுப்புதலுக்காக ஜெபிக்க வேண்டுமென நம்மை தூண்டிக் கொண்டிருக்கிறார். ஆவியானவரின் நடத்துதலை நாம் பின்பற்றி விசுவாசத்தோடு ஜெபித்து, முன்னேறிச் செல்வோம். ஒருவரையொருவர் அனுதினமும் உற்சாகப்படுத்துவோம். அதன் மூலமாக நாம் இணைந்து செயல்பட்டு, ஜெபித்து இந்தக் கடைசி நாட்களில் ஒரு பலத்த தேவனுடைய கிரியையை எதிர்பார்ப்போம்.

விசுவாசத்தைத் துவக்குகிற வரும் முடிக்கிறவரும் இயேசு. அனேகர் கடந்த காலங்களில் அதிகமாக ஜெபித்த துண்டே. நாம் ஏன் அவ்வாறு ஜெபிக்க வில்லை? தேவன் உத்தமர். அவரது வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவை. நாம் விசுவாசிப்பது ஒன்றே நமது கடமை.

300 பேர் கொண்ட கிதியோனின் சேனை போதுமானது. பெலிஸ்தரின் பாளயத்துக்குள்ளே செல்ல மூன்று பேர் போதும். எனவே தேவன் தமது ஆவியைப் பொழிய எண்ணிக்கை தேவையில்லை *2சாமு.23:16, எபே.6:12.*

யோசுவாவும் காலேபும் நேசித்தது போல தேவனை நேசித்து விசுவாசித்து வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தலைவர்கள் வேண்டும். நாம் விவாதங்களில் ஈடுபடாமல் இணைந்து எழுப்புதலுக்காக ஜெபிப்போம் *(சக.10:1)*. ஒருவரையொருவர் நேசித்து தேவன் தமது வழியை நமக்குக் காண்பித்து ஒரு பலத்த பரிசுத்த ஆவியின் எழுப்புதலின் மூலம் நம்மை ஒன்றுபடுத்துவாராக *(யோவா.17:20-23)*.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆபத்துகளை எண்ணி தேவனுக்கு முன் பாக சாஷ்டாங்கமாக விழுந்து அவரைப் பணிந்து கொள்வது அவசியம். இது தான் பொருத்தமானதும் நிலையானது மான நிலைப்பாடு. கெத்செமெனேயிலே இயேசு இவ்வாறு ஜெபித்தார் (மத்.26:39). மக்கள் தேவனுக்கு முன்பாக முகம் தரையில் பட விழுந்து ஜெபிக்கும் போது எழுப்புதல் அருகில் உள்ளது.

4. எழுப்புதலின் ஜெபம் பரிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது:

அவை "முடிவுற்ற கிரியைகளை" அடிப்படையாகக் கொண்டவை. கிறிஸ்து இயேசுவின் மீட்பின் முதலீட்டில் தான் எழுப்புதல் வீரர்கள் ஜெபிக்கிறார்கள். கல்வாரியின் கிரையத்தில் தான் இந்த மன்றாட்டுகள் ஏறெடுக்கப் படுகின்றன. "தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் அருளாதிருப்பதெப்படி?" ரோமர் 8:32. கிறிஸ்துவின் பரிகாரத்தின் அடிப்படையில் வரப் போகிற எழுப்புதலுக்காக நாம் போராடி ஜெபிக்க வேண்டும்.

5. எழுப்புதல் ஜெபங்கள் உடன்படிக்கையினை அடிப்படையாகக் கொண்டவை:

புதிய ஏற்பாட்டின் உடன் படிக்கை ரத்து செய்யப்பட முடியாதது, மாற்றப்படவும் கூடாதது. எனவே பரிசுத்த வான்கள் எழுப்புதலுக்கான சட்டப்படியான நடவடிக்கையை எடுக்க முன் வருகிறார்கள். புதிய உடன்படிக்கை என்பது, விசுவாச வீரர்கள் எழுப்புதலின் ஆசீர்வாதத்தைத் திறக்க பயன் படுத்திய திறவு கோலாகும்.

6. எழுப்புதலின் ஜெபங்கள் இணைந்த ஜெபங்கள்:

ஐக்கியமும் இணைதலும் எழுப்புதலுக்கு மிகவும் இன்றியமை யாதவை. எழுப்புதலாளர்களும் சீர் திருத்தவாதிகளும் இந்தத் தேவையை மனதிலாக்கியிருந்தனர். புதிய இங்கிலாந்தில் எழுப்புதலின் தந்தையாகிய **ஜோனதான் எட்வர்ட்ஸ்** எழுப்புதலுக்காக தேவனுக்கு முன்பாக ஆத்தும பாரத்தால் தலை குனிந்து வணங்குவார். அவர் தேவபிள்ளைகளுக்கு ஒரு அழைப்பு விடுத்தார்: "***ஜக்கியத்தோடும் ஜெபத்தில் சிறந்த உடன்படிக்கையோடும் சபைகளில் தேவபணியின் எழுப்புதல் ஏற்பட தூய உடன்படிக்கையோடும் வாக்குத்தத்தங்களோடு வாருங்கள்.***" தேசம் முழுவதும் ஜெபக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஜனங்கள் மேல் ஜெப ஆவி இறங்கியது. இரவு முழுவதும் மக்கள் ஜெபத்தில் செலவு பண்ணினார்கள். "கோபம் கொண்ட தேவ கரங்களில் பாவிகள்" என்ற அவருடைய உலகப் புகழ் பெற்ற பிரசங்கத்திற்கு முன்னால் அவரது சபையார் முழு இரவையும் ஜெபத்தில் செலவு செய்தனர்.

நாமும் ஜெபத்தில் ஆத்துமாக்களுக்காக வேதனைப்பட வேண்டும். தேவனுக்கு முன்பாக நாம் தலைகுனிவதற்குக் காரணங்கள் உண்டு. கர்த்தரைப் புலம்பலோடும் அழுகையோடும் தேடுவதற்கான காலம் இது. சபை தாழ்மைப் படுத்தப்பட்டிருக்கிறது. தேவனற்றவர்கள் தைரியமாயிருக்கிறார்கள், வாலிபர் நிர் விசாரமாயிருக்கிறார்கள். தேவ ஊழியக் காரர்கள் நிந்தையிலிருக்கிறார்கள். சத்துருக்கள் சபையைப் பரிகாசம் பண்ணுகிறார்கள். தேவ பயமின்மை ஓங்கி நிற்கிறது. இத்தகைய கடின காலங்களில் தானியேல் தேவனுடைய முகத்தை உபவாசத்தோடும் பணிவோடும் தேடினான். நாம் தேவனுக்காகக் காத்திருக்க வேண்டும். தேவனுடைய பலத்த வெளிப்பாட்டையும் அவரது இயற்கைக்கு மேலான பிரசன்னம், வலிமை ஆகிய வற்றை கண்டு மகிழ பலத்த போராட்ட ஜெபம் தனி அறைகளிலே, வீடுகளிலே,ஆராதனைகளிலே, சேவைகளிலே மற்றும் பொது ஜெபங்களிலே காணப்பட வேண்டும். ஆத்தும பாரத்தோடு வேதனையோடு ஜெபிக்கும் போது ஆத்தும அறுவடை பெருகும்.

7. எழுப்புதலின் ஜெபங்கள் சுயநல மற்றவை:

அன்பு தற்புகழை நாடாது, தேவ மகிமையை நாடும். சபை மற்றும் உலகத்தின் நன்மையையே நாம் நாட வேண்டும். தங்கள் ஜனங்களை இரட்சிக்க மோசே, பவுல் போன்றவர்கள் தங்கள் பெயர் ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடப்படவும் ஆயத்தமாயிருந்தார்கள் யாத். 32:32, ரோமர் 9:3. "***எங்களுக்கு அல்ல, கர்த்தாவே எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும் உமது சத்தியத்தினிமித்தமும் உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்***" என்று உங்களால் ஜெபிக்க முடியுமா?

இத்தகைய ஒப்பற்ற பண்பு படைத்தவர்களால், அவர்கள் ஜெபங்களால்தான் முந்தைய எழுப்புதல்கள் ஏற்பட்டன. இத்தகைய பண்புகளும் ஜெபங்களும்தான் இன்று எழுப்புதலை ஏற்படுத்த முடியும். ஆவிக்குரிய கரிசனை மோசேயைப் போல நம்மையும் திறப்பின் வாயில் நிற்கச் செய்யும். அதோடு "எப்படிச் செல்ல என்று எனக்கு தெரியாது, ஆயினும் உமது ஆசீர்வாதம் எனக்கு வேண்டும்" என்று ஜெபியுங்கள்.

கிருபையின் ஆவியானவர் தம்மை வெளிப்படுத்துவார். நாம் இவ்வாறு ஜெபிக்கச் செய்வார்: "எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப் போற்றி, உம்மைத் துதிக்கிறதில் மேன்மை பாராட்டும்படி எங்களை இரட்சித்து, எங்களை ஜாதிகளிலிருந்து சேர்த்தருளும்" சங்.106:47.

நம்பிக்கை வைத்து ஜெபிப்பதற்காக உற்சாகப்படுத்துதல்

Encouragement to Trust and Pray

Charles H Spurgeon (1834-1892)

"... உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார்" ஏசா.30:19.

அவர் உனக்கு உருக்கமாய் இரங்குவார்

முதலாவது நான் சொல்ல விரும்புவது, நமது ஆறுதலின் அடித்தளம் இந்த வசனத்திலுள்ள எளிய தேவ வாக்குத்தத்தத்தில் அமைந்துள்ளது. அது வேதவாக்கியங்களிலெல்லாம் பரவி கிடக்கிறது. ஏன் நாம் தேவனிடத்தில் திரும்பி அவரை நம்ப வேண்டும்? ஏனெனில் அவர் பொய் சொல்லாத வரும் வாக்கு மாறாதவருமாயிருக்கிறார். அவர் உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார். அவரது பொய்யுரையாத வசனத்துக்கு இது நிரூபணமாயிருக்கிறது. வேதபுத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு வசனத்தின் மீது உங்கள் விரலைப் பதித்து "நான் தேவனது வார்த்தைகளை விசுவாசித்து, எனது ஜெபத்தைக் கேட்க அவர் உருக்கமான ஆயத்தத்துடன் இருக்கிறார்" என்று சொல்லுங்கள். இதைவிடக் கூடுதலாக நமக்கு எது வேண்டும்? தன் தந்தையின் வார்த்தையை விட குழந்தைக்கு என்ன உறுதி வேண்டும்? எஜமானுடைய வாக்கை விட உத்தம சீஷனுக்கு என்ன உறுதியான நிரூபணம் வேண்டும்? "இப்படி எழுதப்பட்டிருக்கிறதே" என்பது போதாதா? உடனே முழங்காற்படியிட்டு இந்த வார்த்தையால் மன்றாடுங்கள்.

உங்கள் நண்பர் உங்களிடம் "நான் உங்கள் வேண்டுதலை நிறைவேற்று வேன்" என்று கூறினால் நம்ப மாட்டீர்களா? உங்கள் பிதாவின் மீது சந்தேகப்பட வேண்டாம். அவர் உங்கள் தேவன். அவருடைய வாக்கின் மீது அவநம்பிக்கைகொள்ள எந்தத் தருணமும் ஏற்படுத்த மாட்டார். அவரது வாக்குத்தத்தங்கள் உத்தமமானவை. வாருங்கள் அவரது உறுதி நன்கு அஸ்திபாரமுடையது. எத்தனையோ வாக்குத்தத்தங்களை அவர் அருளியிருக்கிறார். கிருபையின் வாக்குத்தத்தங்களாகிய தேவ வசனங்கள் நடு இரவைப் அழகு படுத்தும் நட்சத்திரங்களைப் போல திரளாயிருக்கின்றன. அவற்றையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். அவை ஏராளமாயிருந்தாலும் நம்பிக்கைக் குரியவைகள். உங்கள் அனுபவத்தில் அவர் தமது வாக்குகளை நிறைவேற்றுவதில் உத்தமர் என்று அறிவீர்களா?

தேவனுடைய கிருபையின் தன்மை

இரண்டாவதாக இந்த நம்பிக்கையின் அடித்தளம் தேவனுடைய கிருபையின் தன்மையின் மீது கட்டப்பட்டுள்ளது. "அவர் உங்களுக்கு உருக்கமாய் இரங்குவார்" இது தேவனுடைய இயற்கை. அவருடைய செயல்பாடுகளில் இஸ்ரவேலின் தேவன் தயாள குணமுள்ளவர். ஜீவராசிகளுக்கெல்லாம் தமது கைகளைத் திறந்து அவைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார். அவர் தாராள சிந்தையுடை

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யவர்.தனது பாவமுள்ள சிருஷ்டிகள் மேல் இரக்கமுள்ளவர். தம்முடைய ஒரே செல்லக் குமாரனையே பலியாகக் கொடுத்தவர் *(ரோமர் 8:32)*. எனவே அவர் எத்தகைய இரக்கமுள்ள தேவன் என்று பாருங்கள்!

அவரது மன்னிப்புக்கும், அன்பு - இரக்கத்துக்கும் அளவே இல்லை. அவரது அன்பு ஆச்சரியமானது. அது ஆழ்கடலை விட ஆழமானது. வானங்களைப் பார்க்கிலும் உயரமானதும், கடலைப் பார்க்கிலும் அகலமானதுமாம். நீங்கள் எந்த கலக்கத்திலிருந்தாலும் உதவி செய்ய அவர் இரக்கமுள்ளவர். எந்தப் பாவியாயிருந்தாலும் மன்னிக்க இரக்கமுள்ளவராய் இருக்கிறார். பின்வாங்கிவிட்டீர்களா? மறுபடியும் சேர்த்துக்கொள்ளும் இரக்கம் அவரிடமுண்டு. உங்கள் சோதனைகள் என்ன? அவற்றைக் கடந்து செல்ல அவர் இரக்கம் மிகுந்தவர். நீ ஒரு கடின மனிதனாக அவரை விட்டுஓட விரும்பலாம். ஆனால் அவரது இரக்கம் சதா காலங்களிலும் உங்களோடு கூட இருந்து அவரிடம் திருப்ப கவனமாயிருப்பார். வாருங்கள் நாம் சேர்ந்து இந்நிமிஷமே கர்த்தருடைய பாதத்தில் நம்மைப் படைத்து அவரை காணாவிட்டாலும் கிறிஸ்துவில் வெளிப்படுத்திய அவரை நம்புவோம். அவரோடு சமாதானம் பெற்று நன்மைகளைப் பெற்றுக் கொள்வோம்.

அவரது தன்மை அன்பு, கிருபை, இரக்கம் ஆகியவற்றால் நிரம்பியது. அவரைத் தேடுகிறவர்களுக்கு அவர் கிருபை மிகுந்தவர். எனவே, உடனே நாம் ஒவ்வொருவரும் அவரைத் தேடுவோம். அவர் கிருபையுள்ளவர் என்றல்ல, அதிக கிருபையுள்ளவர் என்று வசனம் சொல்லுகிறது. கிருபை அலங்கரிப்பான வார்த்தையோடு கூறப்படுகிறது. வேத வாக்கியங்களில் அவரது இரக்கத்தைக் குறித்து படிக்கும்போது அது மிகைப்படுத்திக் கூறப்படுவதைக் காணலாம். உதாரணமாக "...தேவனோடு இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய்..." *(எபேசி.2:4)* "கர்த்தர்...மிகுந்த கிருபையுள்ளவர்." *(சங்.103:8)* "அவருடைய கிருபை என்றென்றைக்குமுள்ளது" *(சங்.100:5)* "...நம்முடைய தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே..." *(லூக்.1:78)* "...அவர் கிருபை என்றுமுள்ளது." *(சங்.107:1)* "அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது." *(சங்.117:2)* "...உமது மிகுந்த இரக்கங்களின்படி.." *(சங்.51:1)* கர்த்தருடைய இரக்கத்தைக் குறித்து எவ்வளவு பெருமை பாராட்டப்படுகிறது. எந்த மொழியிலும் விவரிக்க முடியாததாயிருக்கிறது.

"உங்கள் மீது அவர் மிகவும் கிருபையாயிருக்கக்கடவர்". விசேஷித்த ஆறுதல் வேண்டுமா? அதுவும் கிடைக்கும். பெரிய உதவி வேண்டுமா? அதுவும் பெறலாம். மிகப்பெரிய பாவிக்கும் தாராளமாக மன்னிப்பு கிடைக்கும். துக்கம் நிறைந்தவர்களுக்கு அதிக ஆறுதல் கிடைக்கும். களைப்படைந்த பிரயாணியே, பூரண இளைப்பாறுதல் கிடைக்கும். ஏழ்மையிலும் தேவையிலும் இருப்போருக்கு வேண்டியவைகள் தாராளமாய்க்கிட்டும்.

அன்பு இரக்கம் ஆகியவற்றின் நதிகள் இங்கே
ஒரு ஐசுவரியமான கடலில் சேருகின்றன.
இரட்சிப்பு தாராளமாய்ப் பாய்ந்து ஓடுகிறது,
பாலும் திராட்ச ரசமும் போல பிரளயமாய் செல்லுகிறது
எங்கும் பரவிக் காணப்படும் ஜெபம்.

அடுத்து பரவிக் காணப்படும் ஜெபம் என்றும் சிறந்த சத்தியத்தின் மீது உலகம் நிலைகொண்டிருக்கிறது. உங்களது அழுகையின் சத்தத்தில் அவர் உங்களுக்கு கிருபையாயிருப்பார். தேவன் மக்களை ஜெபிக்க அனுமதிப்பது ஆச்சரியமாகும். அப்படி அனுமதிக்கும் போது அவர்கள் ஜெபிக்காமலிருப்பது ஆச்சரியம்! மனிதனது குரலை கவனிப்பது தேவனுடைய ஒரு பெரிய அதிசயம்.

நாங்கள் அனுபவத்திலிருந்து உங்களிடம் தேவன் நம் குரலை கிருபையாய் கவனிப்பவர் என்கிறோம். அவர் ஒரு இரக்க ஆசனத்தினை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். சந்தேகப்படுகிறவனே, தெய்வீகத்தால் நியமிக்கப்பட்ட இரக்க ஆசனம் ஜெபத்தைக் கேட்பதற்காகவே அமைக்கப்பட்டுள்ளது. தமது ஒரே பேரான குமாரனுடைய இரத்தத்தினை அதன் மீது பரிகாரமாக தெளித்திருக்கிறார். தமது ஒப்பற்ற இரத்தத்தை சிந்தின அவர் அவரை நம்பி வரும் பாவியை புறம்பாக்குவாரா? நாம் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று அறியாதிருக்கிறபடியால் தூய ஆவியானவரை ஜெபத்தில் உதவி செய்யும்படி, வாக்குப்பண்ணியிருக்கிறார். நம் ஜெபங்கள் ஊக்கமான வைகளாயிருக்க அவர் ஆவியானவரை அருளியிருக்கிறார். தமது சிருஷ்டிகளின் கதறலை கவனிப்பது தேவனுக்குப் பிரியமானது. உங்கள் குரல் கரகரப்பாகவும் வசீகரமற்றும், உங்கள் ஜெபம் குழந்தையின் அழுகை அல்லது ஒரு சிறு பறவை பசியாயிருக்கும் போது எழுப்பும் குரல் போலவும் இருக்கலாம். காக்கைக் குஞ்சுகள் பசியாயிருக்கும் போது அவற்றில் இனிமையற்ற குரல்களை கவனிக்கிற தேவன் நீங்கள் உங்கள் இருதயங்களை அவருக்கு முன்பாக ஊற்றிவிடும்போது கவனிக்காமலிருக்க முடியுமா?

அவர் நிச்சயம் பதிலளிப்பார். சீக்கிரமாக பதிலளிப்பார். "அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே, நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும் போதே கேட்பேன்" *(ஏசா.65:24)* ***உள்ளத்தில் இரக்கத்திற்கான உத்தம ஜெபம் இருக்கும் போது அது ஏறெடுக்கப்படுமுன்னே கேட்கப்பட்டுவிடும்.*** ஏனெனில் கிருபை நம்மை இவ்வாறு ஜெபிக்கச் செய்கிறது. கிருபைக்காக உத்தமமாய்க் கேட்கிறவர்கள் ஏற்கனவே சிறிதளவு கிருபையை உடையவர்கள்தான். அவர்கள் இன்னும் அதிகமாகக் கேட்க உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். இது நம்மை உற்சாகப்படுத்தட்டும். தேவன் கிருபையாயிருந்து கொண்டிருக்கிறார். நாம் அவரிடம் திரும்பி, முழுமனதோடும் அவரை நோக்கி "என் பிதாவே, என்னை இரட்சித்து, இப்போதே எனக்கு உதவி செய்யும்" என்று கேட்போமாக.

தொழுது கொள்ளுதல் - உண்மையான ஜெபத்தின் ஒரு பகுதி

Adoration- An element of True Prayer

D.L.Moody (1837 - 1899)

ஆவிக்குரிய வாழ்வில் ஜெபம் சிறந்த பயிற்சியாக இடம்பெறுகிறது. எனது சமயத்தில் பெரும்பான்மையையும் எனது இருதயம் தேவனோடு ஜெபத்தில் தொடர்பு கொண்டிருக்கச் செய்கிறேன். "***ஜெபம் பூமியை பரலோகத்தோடு இணைக்கிற தொடர்பாக இருக்கிறது***" என்று ராபர்ட் முர்ரே மெக்கெய்ன் கூறியிருக்கிறார்.

உத்தம ஜெபத்துக்கு ஒன்பது முக்கியமான கூறுகள் உள்ளன என்று கூறலாம். அவற்றில் முதன்மையானது தொழுது கொள்ளுதல். தேவனை சந்திக்க ஆயத்தம் வேண்டும். நமது கண்களுக்கு எட்டாத தூரத்தில் இருப்பவரை சந்திப்பது போல நாம் அவரை அணுக வேண்டும். அடுத்து பாவ அறிக்கை. பாவம் வெளியே கொண்டு வரப்பட்டு அகற்றப்பட வேண்டும். தேவனுக்கும் நமக்கும் இடையில் மீறுதல்கள் இருந்தால் ஜெபம் கேட்கப்பட முடியாது. ஒரு மனிதனுக்கு எதிராக நாம் ஏதாவது தவறு செய்திருந்தால், அவனிடம் சென்று தவறை ஒப்புக்கொள்ளும்வரை அவனிடமிருந்து எந்தவித நன்மையையும் எதிர்பார்க்க முடியாதல்லவா?

ஈடுசெய்தல் இன்னொன்று. எங்கு தவறு செய்தோமோ அங்கு அத்தவறு ஈடுசெய்யப்பட வேண்டும். அடுத்தது நன்றி சொல்லுதலாகும். ஏற்கனவே தேவன் செய்த நன்மைகளுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். தொடர்ந்து மன்னிப்பும் ஐக்கியமும் வேண்டும். ஜெபத்திற்குப் பதில் கிடைக்க விசுவாசம் நிச்சயமாக வேண்டும்.

இப்போது நமது விண்ணப்பங்களை ஏறெடுக்கலாம். நமது ஜெபங்களில் இவைகள் தான் அதிகமாயிருக்க வேண்டும். இவைகளுக்குப் பின் வருவது ஒப்படைத்தல். ஜெபிக்கும் போது நாம் தேவசித்தத்தை ஏற்றுக்கொள்ளவும் ஆயத்தமாயிருக்க வேண்டும். இந்த நிபந்தனைகளை நாம் சந்திக்கக் கூடுமானால் நாம் நமது ஜெபங்களுக்குப் பதில்களைப் பெறுவதும் சாத்தியமாகும்.

தொழுது கொள்ளுதல்

இந்தத் தலைப்பில் முதலாவதாக நாம் தொழுது கொள்ளுதலை எடுத்துக் கொள்ளுகிறோம். அதன் மூலம் தெய்வீக கனத்தை, மதிப்பை மற்றும் அன்பை தேவனுக்குச் செலுத்துகிறோம். எழுத்தின்படி இதன் பொருள் '***கையை முத்தம் செய்வது***' ஆகும். கீழ் நாடுகளில் இது

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்னைத்தான் தாழ்த்தி கனம் செலுத்துவதற்கான அடையாளமாகும். தேவனுக்கு முன்பாக இந்த ஆவியோடு வருவது சிறப்பானது. இதனால்தான் வேதவசனம் இதனை வலியுறுத்துகிறது.

Rev.Newman Hall என்பவர் கர்த்தருடைய ஜெபத்தைக் குறித்த தமது ஆராய்ச்சியில் "மனிதனுடைய தொழுகை வெளிப்படுத்தலுக்குப் புறம்பாக ஒன்று போல சுயநல தன்மையுடைய தாயிருக்கிறது? நாம் தேவனிடத்தில் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக நன்றி சொல்ல வருகிறோம் அல்லது உணவு, உடை, ஆரோக்கியம், பாதுகாவல் மற்றும் ஆறுதல் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக அவரிடம் வருகிறோம். யாக்கோபு பெத்தேலில் எப்படி ஜெபித்தானோ அப்படி நமது ஜெபங்கள் காணப்பட வேண்டும்.

பொதுவாக நமது ஜெபங்களில் சுயம் காணப்படுகிறது. தேவனுக்கு நேராக நாம் செல்வது போல காணப்பட்டாலும் நம்மையே நாம் பிரதிபலிக்கிறோம். இதனால்தான் நமது ஜெபங்கள் அடிக்கடி நோவா பேழையிலிருந்து அனுப்பிய காகம் திரும்பியே வராதது போலிருக்கிறது. ஆனால் நமது தொழுகையில் தேவனுடைய மகிமையையே முக்கியமாகக் கொள்வோமானால் அவை புறா தன் அலகில் ஒலிவக்கிளையைக் கொண்டு வந்தது போல பலனளிப்பதாயிருக்கும்.

தானியேலின் தீர்க்கத்தரிசனத்தின் ஒரு பகுதியை நாம் எண்ணிப் பார்ப்போம். அவன் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று அறிந்திருந்தான். அவனது ஜெபம் பரலோக ஆசீர்வாதங்களை அவன் மீதும் அவனது ஜனங்கள் மீதும் கொண்டு வந்தது. "நான் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி, பாவ அறிக்கை செய்து: ஆ ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே" *(தானி.9:3-4)* 'மகத்துவமும் பயங்கரமுமான தேவனே' என்பதை கவனிக்கவும். தானியேல் தன்னை தேவனுக்கு முன்பாகச் சரியான இடத்தில் நிறுத்திக் கொண்டான். அதாவது தூள் மட்டும் தன்னைத் தாழ்த்துகிறான். தேவன் ஆபிரகாமிடம் பேசிய போது அவன் முகம் தரையில் பட சாஷ்டாங்கமாய் தேவனுக்கு முன்பாக விழுந்து கிடந்தான். பரிசுத்தம் தேவனுக்குரியது. நாமோ பாவத்திலிருக்கிறோம்.

புரூக்ஸ் என்ற சிறந்த மதநெறி தவறாதவர் இப்படி எழுதுகிறார்: உண்மையாகவே தூய்மையாயிருக்கிறவன் தேவனுடைய பரிசுத்தத்தை ஏற்றுக் கொண்டு அதனால் தாக்கமடைகிறவனாயிருக்கிறான். மற்றவர்கள் தேவனுடைய பிற நற்பண்புகளால் தாக்கமடையலாம். தூய்மையானவர்கள் மட்டுமே அவரது தூய்மையால் தாக்கமடைவார்கள். எவ்வளவுக்கதிகமாக ஆழமாக தூய்மையாயிருக்கிறார்களோ அவ்வளவாக அவர்கள் தாக்கமடைவார்கள். பரிசுத்த தூதர்களுக்கு தேவனுடைய பரிசுத்தம் அவருடைய மகிமையின் மோதிரத்தின் ஒளிவீசும் வைரமாகும்.

பாவிக்கு தேவனுடைய பரிசுத்தத்தில் எந்த பங்குமில்லை. ஆனால் பரிசுத்தவான்களுக்கு அது மகிழ்ச்சியும், திருப்தியும் அதிக பயனைத்தருவதும், தேவனுடைய மகிமையான பரிசுத்தத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஏதுவானதுமாகும். எனவே தேவனுக்கு முன்பாக வரும்போது அவரைத் தொழுது அவரது நாமத்தை கனம்பண்ண வேண்டும்.

ஏசாயாவிலும் இதையே காண்கிறோம்."உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டேன்; அவருடைய வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன்தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன்தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து, ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்" ஏசா.6:1-3.

தேவனுடைய பரிசுத்தத்தின் உணர்வு வேண்டும்

தேவனுடைய பரிசுத்தத்தை நாம் காணும் போது அவரை தொழுது மகிமைப்படுத்த வேண்டும். மோசே இந்த பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. தேவன் அவனிடம் தான் அணிந்திருந்த பாதரட்சைகளை அகற்றக் கூறினார். ஏனெனில் அவன் நின்ற இடம் பரிசுத்த பூமி. மக்கள் தங்களைப் பரிசுத்தர் என உயர்த்திக் கூறும் போது அவர்கள் தேவனுடைய பரிசுத்தத்தை குறைவாக எடை போடுகிறார்கள். தேவனுடைய பரிசுத்தத்தின் அளவில்தான் நாம் கணக்கிட வேண்டும். அப்போது நாம் தூளில் விழுந்து அவரை சாஷ்டாங்கம் பண்ணுவோம்.

பேதுருவைப் பாருங்கள். கிறிஸ்து அவனுக்குத் தம்மை வெளிப்படுத்திய போது "ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப் போக வேண்டும்" என்றான். தேவனை நாம் பார்க்கும் போது அதுவே அவர் எவ்வளவு பரிசுத்தமானவர் என்பதையும் நாம் எவ்வளவு அசுத்தமானவர்கள் என்பதையும் காண்பிக்கப் போதுமானது.

யோபுவுக்கும் இதே பாடம் கற்பிக்கப்பட வேண்டியதாயிருந்தது. "அப்பொழுது யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: இதோ நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்? என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன்" *(யோபு40:3,4)*. யோபு சினேகிதருடன் பேசுவதை கவனிக்கும் போது அவன் ஒரு பரிசுத்தவானாகக் காட்சியளிக்கிறான். அவன் குருடருக்குக் கண்களாகவும், ஊனருக்குக் கால்களாகவும், பசியுள்ளவர்களை போஷிக்கிறவனாகவும், வஸ்திரமில்லாதவர்களை உடுத்துவிக்கிறவனாகவும் இருந்தான். எவ்வளவு அற்புதமான ஒரு நல்ல மனிதன். எல்லாமே நான், நான் என்றிருந்தான். தேவன் அவனைப் பார்த்து இறுதியாக: "இப்போதும் புருஷனைப்போல் இடைகட்டிக் கொள்; நான் உன்னைக் கேட்பேன், நீ எனக்கு உத்தரவு சொல்லு" *(38:3)* என்கிறார். தேவன் தம்மை வெளிப்படுத்தினவுடனே, அவனது பேச்சு மாறிவிட்டது. தனது குறைவையும் தேவனுடைய பரிசுத்தத்தையும் கண்டுக் கொள்கிறான். எனவே,"என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன், இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்" *(42:5-6)* என்று கூறுகிறான்.

இயேசு மாம்சத்தில் நடமாடிய நாட்களிலும் அவரிடம் ஆசீர்வாதம் பெற வந்த ஒவ்வொருவரும் அவருடைய மேன்மையைக் குறித்து வெளிப்படுத்தினார்கள். மத்தேயுவில் நாம் வாசிக்கும் நூற்றுக்கதிபதி "ஆண்டவரே, நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல" *(மத்.8:8)* என்றான். யவீரு இயேசுவின் பாதத்தில் விழுந்து தனது விண்ணப்பங்களை ஏறெடுத்தான் *(லூக்.8:41)*. மாற்கு சுவிசேஷத்தில் வரும் குஷ்டரோகி '*முழங்காற்படியிட்டு*' *(மாற்.1:40)* என்றும், சிரபொனிக்கேயா பெண் "*வந்து அவர் பாதத்தில் விழுந்தாள்*" *(7:25)* என்றும், குஷ்டரோகி "முகங்குப் புற விழுந்து" *(லூக்.5:12)* என்றும் படிக்கிறோம்.

அவருடைய அருமையான சீடர்கள் அவரைக் குறித்து "... அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" *(யோவா.1:14)* என்றார்கள். எவ்வளவு தோழமையுடனிருந்து அன்பாகப் பழகினாலும் அதற்கு அதிகமாக அவரை கனம் பண்ணினார்கள்.

பொதுத் தொழுகையில் ஜார்ஜ் ஹெர்பர்ட் என்பவர் ஜெபத்தைக் குறித்து இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> உன் கால் ஆலயத்தில் பிரவேசிக்கும் போது, வணக்கமையாயிருக்கட்டும்.
> தேவன் உன்னைவிடப் பெரியவராய் அங்கிருக்கிறார்.
> அவரது உத்தரவுடன் எச்சரிக்கையுடன் செல்
> கனத்தோடும் பயத்தோடும் செல்வாயாக.
> பெருமையோடு அங்கு முழங்காலிடாதே.
> ஆலய வாசலுக்குள் எல்லாரும் சமம்.

"நீ தேவாலயத்துக்குப் போகும் போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோலப் பலியிடு

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வதைப் பார்க்கிலும் செவிகொடுக்க சேர்வதே நலம். தாங்கள் செய்வது தீமை யென்று அறியாதிருக்கிறார்கள். தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயி னால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியி லிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக" பிர.5:1-2.

தேவன் தம்மை நமக்கு வெளிப் படுத்தி அவரோடு தொடர்பு கொள்ளவும் நாம் உயர்வான வாழ்வு வாழவும் அவருடைய பரிசுத்தம் நமக்கு வேண்டும். முற்கால பரிசுத்தர்களின் வரிசையில் நாம் வர வேண்டும். "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்ற வரிகளைப் பின்பற்ற வேண்டும்.

ஜெபத்தின் மூலம் தேவனோடு கிட்டிச் சேரும்போது, அவருக்குரிய இடத்தைக் கொடுக்க வேண்டும். "... தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம்". "நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக் கிறாரே" எபி.12:28,29.

> யோசுவாவும் காலேபும் தேவன் வாக்குப்பண்ணியதை நிச்சயமாகக் கொடுப்பார் என்று அவர்கள் நம்பினார்கள். அவர்களது மனதுகளும் இருதயங்களும் தேவனில் ஊன்றியாக இருந்ததே தவிர நிபந்தனைகளையோ, சூழ்நிலைகளையோ அல்லது மக்களையோ சார்ந்திருக்கவில்லை.

அந்த நாளுக்காக எனது இருதயத்தை ஆயத்தப்படுத்துதல்

Preparing my heart for the day

George Muller (1805 - 1898)

ஒரு சத்தியத்தை எனக்குப் போதிப்பது கர்த்தருக்கு பிரியமாயிருந் தது. பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாக நான் அதன் பயனை இழந்து போகவில்லை. நான் மிகத் தெளிவாகக் கண்டு கொண்டது என்னவெனில் ஒவ்வொரு நாளும் முதலாவது நான் கவனிக்க வேண்டியது எனது ஆத்து மாவை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வ தாகும். நான் எவ்வளவு கர்த்தருக்காக சேவை செய்கிறேன் என்பதல்ல, எப்படி எனது ஆத்துமாவை மகிழ்ச்சி யாக வைத்துக் கொள்வது என்பதும், எனது உள்ளான மனிதன் எப்படி போஷிக்கப்படுவது என்பதுமே.

மனந்திரும்பாதவர்களுக்கு முன்பாக சத்தியத்தை முன்வைத்து ஆண்ட வரை சேவிக்க நான் நாடலாம்; விசுவாசிகள் பயனடைய நான் பிரயாசப் படலாம்; கவலைப்படுகிறவர்களை விடுவிக்க முயற்சிக்கலாம் அல்லது பலவழிகளில் ஒரு தேவ பிள்ளையைப் போல இவ்வுலகில் காணப்படலாம். ஆனாலும் கர்த்தரில் நான் மகிழ்ச்சியா யிராமலும் எனது உள்ளான மனிதன் போஷிக்கப்படாமலும் பலப்படுத்தப் படாமலுமிருந்தால் இவையெல்லாம் சரியான ஆவியில் கவனிக்கப்பட மாட்டாது.

பத்து வருடங்களுக்கு முன்பு வரை காலையின் நல்ல ஆடை அணிந்தபின் ஜெபிப்பது என் வழக்கம். ஆனால் இப்போது நான் கண்டு கொண்ட முக்கியமான காரியம் என்ன வெனில் தேவவார்த்தையை வாசித்து, தியானித்து, அதன் மூலம் என் இருதயம் ஆறுதல்படுத்தப்படுவதும், உற்சாகப்படுத்தப்படுவதும், அனல் மூட்டப்படுவதும், திருத்தப்படுவதும், போதிக்கப்படுவதுமே முதன்மை யானது. இதன் மூலம் எனது இருதயம் கர்த்தரோடு உறவு கொள்ளும் அனுப வத்தைப் பெற்றேன்.

எனவே புதிய ஏற்பாட்டினை ஆரம்பத்திலிருந்து அதிகாலையில் தியானிக்க ஆரம்பித்தேன். அவ்வாறு அவரது விலையேறப்பெற்ற வசனத் தின் ஆசீர்வாதங்களைப் பெற்ற பின்பு தேவவசனத்தை தியானிக்க ஆரம்பித் தேன். ஒவ்வொரு வசனத்திலுள்ள ஆசீர் வாதங்களைத் தேடினேன். அது பகிரங்க ஊழியத்திற்காகவோ, நான் தியானித் ததைப் பிரசங்கிப்பதற்காகவோ அல்ல, எனது ஆத்துமா நல்ல ஆகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவே.

சில நிமிடங்களுக்குள்ளாக எனது ஆத்துமா பாவ அறிக்கை செய்ய வும், நன்றி செலுத்தவும், மன்றாடவும் என்னை அர்ப்பணிக்கவும் ஆரம்பித் தேன். ஜெபிக்குமுன்பே நான் தியானிக் கும் போதே இவை நடந்தன. ஆயினும் திடீரென இவை ஜெபமாகவே மாறி விட்டன.

இவ்வாறு பாவ அறிக்கை, மன்றாட்டு, வேண்டுதல், நன்றி செலுத் துதல் இவைகளுக்குப் பின் அடுத்த வசனத்திற்குக் கடந்து செல்கிறேன். இப்படிச் செய்து கொண்டே எனக் காகவும் பிறருக்காகவும் வசனம் என்னை நடத்துகிறது போல ஜெபிக் கிறேன். ஆனால் என் கண்களுக்கு முன்னால் தொடர்ந்து வசனத்தை எனது ஆத்துமாவுக்கான ஆகாரமாக வைத்துக் கொண்டிருக்கிறேன்.

எனது முந்தைய ஜெபத்திற்கும் இப்போதைய ஜெபத்திற்கும் வேறு பாடு இதுதான். முன்பு நான் எழும்பி யதும் உடனே ஜெபிக்க ஆரம்பித்து காலை உணவு மட்டும் அல்லது முழு நேரமும் ஜெபித்தேன். எல்லா முறை களிலும் நான் ஜெபத்தோடுதான் பொதுவாக ஆரம்பிப்பேன். சில வேளைகளில் வழக்கத்திற்கு மாறாக எனது ஆத்துமா வறட்சியாயிருந்தால் வேத வசனத்தை ஆகாரமாக, ஒரு மலர்ச்சிக்காக அல்லது எழுப்புதல் அல்லது எனது உள்ளான மனிதன் பலப்படுவதற்காக வாசிப்பதுமுண்டு.

ஆனால் இதன் விளைவு என்ன? நான் ஆறுதல், உற்சாகம், என்னைத் தாழ்த்துதல் என்ற அனுபவங்களுக்கு முன்னால் கால் மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை முழங்காவில் நிற்பேன். முதல் 10 அல்லது 15 நிமிடங்கள் அல்லது அதற்கு மேலாக என் மனம் அலைந்து அமர்ந்த பின் நான் உண்மையாக ஜெபிக்க ஆரம்பிக் கிறேன்.

இப்போது நான் இப்படி இந்த முறையில் அதிகமாக ஜெபிப்ப தில்லை. ஏனெனில் எனது ஆத்துமா சத்தியத்தால் போஷிக்கப்பட்டு, தேவனோடுள்ள உறவை அனுபவிக் கிறது. நான் எனது பிதாவோடும், நண்பனோடும் பேசுவது போல பேசுகி றேன். (எனக்குத் தகுதி இல்லாவிட்டா லும்) அவருடைய விலையேறப் பெற்ற வார்த்தையை முன்னாலேயே நான் ஏன் கண்டுபிடிக்கவில்லை என்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

எழுப்புதலுக்கான ஜெபம் மற்ற எல்லா ஜெபங்களையும் விட வேறு பட்டது.

ஐக்கியமும் இணைதலும் **எழுப்புதலுக்கு** மிகவும் இன்றியமையாதவை.

புதிய உடன்படிக்கை என்பது, விசுவாச வீரர்கள் **எழுப்புதலின்** ஆசீர்வாதத்தைத் திறக்க பயன்படுத்திய **திறவு கோலாகும்.**

ஆத்தும **பாரத்தோடு வேதனையோடு** ஜெபிக்கும் போது ஆத்தும அறுவடை பெருகும்.

உத்தம ஜெபத்துக்கு ஒன்பது முக்கியமான கூறுகள் உள்ளன என்று கூறலாம். அவற்றில் முதன்மையானது **தொழுது கொள்ளுதல்.**

ஆவிக்குரிய வாழ்வில் **ஜெபம்** சிறந்த பயிற்சியாக இடம்பெறுகிறது.

கிருபையின் வாக்குத்தத்தங்களாகிய தேவ வசனங்கள் நடு இரவைப் அழகு படுத்தும் நட்சத்திரங்களைப் போல திரளாயிருக்கின்றன.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason